தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.95 /மா/2024
நாள் 18.09.2024

திரு.B.இரமேஷ், முறையீட்டு மனுதாரர்
சென்னை–104

மண்டல அலுவலர், எதிர் மனுதாரர்
மண்டலம் 12,
பெருநகர சென்னை மாநகராட்சி,

சென்னை–104 உயர்நீதிமன்ற வளாகம் 222, புதிய கூடுதல் சட்ட அறை, என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு.B.இரமேஷ், வழக்கறிஞர் என்பவரின் 18.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில்19.01.2024 அன்று பெறப்பட்டு, 95/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–104 உயர்நீதிமன்ற வளாகம், 222, புதிய கூடுதல் சட்ட அறை, என்கிற முகவரியில் அலுவலகம் வைத்திருக்கும் திரு.B.இரமேஷ், வழக்கறிஞர் என்பவர் 18.01.2024 நாளிட்ட தனது மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"திரு.B.இரமேஷ் மனுதாரர் தன்னுடைய மனுவில் தான் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்குரைஞராக பணி புரிந்து வருவதாகவும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பொது சாலைகளில் கால்நடைகள் எந்தவித கட்டுப்பாடுமின்றி சுற்றித் திரிகின்றன என்றும் இதனால் சாலையில் நடந்து செல்லும் சாதாரண பொது மக்கள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், மேலும், சாலைகளில் கட்டுப்பாடின்றி திரியும் கால்நடைகளால் பொது மக்களுக்கு பெரும்காயம் ஏற்பட்டு அவர்கள் மருத்துவ சிகிச்சை பெறுவது குறித்து பலமுறை தினசரி நாளிதழ்களில் செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன எனவும், இவ்வாறு சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் கட்டுப்பாடின்றி திரியும் கால்நடைகளை அவிழ்த்துவிடும் உரிமையாளர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்றும் இந்நிலையில் கடந்த 10.01.2024 தேதியில் தினமலர் நாளிதழ் சென்னை பதிப்பில் "தொடரும் விபரீதம் ஓய்வு பெற்ற அரசு

ஊழியர் மாடு முட்டி பரிதாப பலி'' என்ற தலைப்பில் செய்தி வெளி வந்துள்ளது எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மண்டல அலுவலர் சாலைகளில் திரியும் கால்நடைகள் மற்றும் அவற்றின் உரிமையாளர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அநியாயமாக சென்னை நங்கநல்லூரைச் சேர்ந்த சந்திரசேகர் (Senior Citizen) என்பவர் சாலையில் நடந்து சென்ற போது மாடு முட்டி உயிர் இழந்துள்ளார் எனவும் இவரின் இறப்புக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மண்டல அலுவலர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் ஆகியோரின் கடமை தவறிய செயலே காரணமாகும் என்று தெரிவித்து மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் நடந்து செல்லும் பொது மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது எனவும் இது இந்திய அரசிலமைப்பு சட்ட உருபுகள் 14 மற்றும் 21ல் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறும் செயலாக உள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் கடமை தவறி பொதுஜனம் ஒருவரின் உயிரிழப்புக்கு காரணமான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மண்டல அலுவலர் மீதும், இதை கண்காணிக்கத் தவறிய பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர் மீதும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் பொது மக்கள் எந்தவித அச்சமுமின்றி பாதுகாப்பாக பயணம் செய்வதை உறுதிபடுத்த நிரந்தர நடவடிக்கை எடுக்கவும் மற்றும் வழிகாட்டுதலை உருவாக்க தமிழக அரசுக்கு உத்தரவிடுமாறும் மேலும் நியாயமெனக் கருதும் இன்னபிற உத்தரவுகளை பிறப்பிக்குமாறு மாண்பமை நடுவத்தை பொது நலன் கருதி கோரியுள்ளார்.

2) மேற்கண்ட மனு மீதான அறிக்கையினை அனுப்புமாறு இம்முறைமன்ற 22.01.2024 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 12இன், மண்டல அலுவலர் தன்னுடைய 18.03.2024 மற்றும் 22.08.2024 நாளிட்ட கடிதங்களில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"மண்டலம் 12இல் சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகள் சம்பந்தமாக வரும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தினமும் சாலைகள் மற்றும் தெருக்களில் சுற்றி திரியும் மாடுகள் பிடிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது என்றும் அதன்படி கடந்த வருடம் மண்டலம் 12 முழுவதும் 303 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூபாய் 15,15,000/- அபராதம் சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் பகுதி 37யை உள்ளடக்கிய நங்கநல்லூர் மற்றும் பழவந்தாங்கல் பகுதிகளில் மொத்தம் 112 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூபாய் 5,60,000/- அபராதம் சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12 ஆலந்தூர் பொது சுகாதாரத்துறை மூலம் 09.10.2023 அன்று நங்கநல்லூர் KCT மஹாலில் கால்நடை உரிமையாளர்களுக்கு ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டு கால்நடைகளை பிரதான சாலைகள் மற்றும் தெருக்களில் விடாமல் கட்டி வைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேலும் 09.01.2024 அன்று மாலை 4.30 மணி அளவில் எண்.23, அஷயா பிளாட்ஸ், ஸ்டேட் பாங்க் காலனி மெயின், நங்கநல்லூர் சென்னை 61 என்ற முகவரில் வசித்து வரும் திரு.சந்திரசேகர் 61 வயதுடைய நபர் எம்.ஜி.ஆர் ரோடு நங்கநல்லூர் cake world கடை அருகில் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது சண்டையிட்டபடி அவருக்குப் பின்னால் வந்த இரண்டு எருமை மாடுகளுக்கு இடையே சிக்கி, சம்பவ இடத்தில் உயிரிழந்தார். சம்பவம் நடந்த இடத்தினை மாநகராட்சி கூடுதல் தலைமை செயலர்/ஆணையர் 10.01.2024 அன்று நேரில் ஆய்வு செய்து சாலையில் சுற்றி திரியும் கால்நடைகளை பிடிக்க உத்தரவிட்டார் என்றும் அதன் தொடர்ச்சியாக நங்கநல்லூர் பகுதியில் 9 மாடுகள் பிடிக்கப்பட்டு புதுப்பேட்டை D மாட்டு தொழுவத்தில் ஒப்படைக்கப்பட்டது எனவும் விபத்து சம்பந்தமாக S9 பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றும் ஜூலை 01.07.2024 முதல் மாடுகள் பிடிப்பதற்கென

மண்டல அளவில் 5 பணியாளர்கள் தலைமையகம் மூலம் நியமிக்கப்பட்டு மாடுகள் பிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், தெருக்கள் மற்றும் சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளால் ஏற்படும் இடையூறுகளை கட்டுபடுத்தும் பொருட்டு 01.08.2024 முதல் ரூ 5000/– ஆக இருந்த அபராதத் தொகையினை ரூ10,000/– ஆக உயர்த்தி மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டு மாடுகள் பிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. நங்கநல்லூர் பகுதியில் சில குறிப்பிட்ட இடங்களில் பொதுமக்கள் கீரை மற்றும் உணவுகளை மாடுகளுக்கு வழங்குகிறார்கள். அவர்களிடம் மாடுகளுக்கு கீரை மற்றும் உணவுகளை தெருக்களில் வழங்காமல் தவிர்த்திடுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி 2024 முதல் ஜூலை 2024 வரை மண்டலம் 12 முழுவதும் 84 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 4,20,000/–பெருநகர சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் பகுதி 37யை உள்ளடக்கிய நங்கநல்லூர் மற்றும் பழவந்தாங்கல் பகுதியில் மொத்தம் 4 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 2.00 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. அபராதம் உயர்த்தப்பட்ட ஆகஸ்ட் 2024ம் வருடம் முதல் தற்போது வரை மண்டலம் 12 முழுவதும் 9 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 90,000/– பெருநகர சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் நங்கநல்லூர் மற்றும் பழவந்தாங்கல் பகுதியில் மொத்தம் 4 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ40,000/– பெருநகர சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது. மண்டலம்–12, ஆலந்தூர் பொது சுகாதாரத்துறை மூலம் அவ்வப்பொழுது நங்கநல்லூர், பழவந்தாங்கல், பகுதிகளில் உள்ள கால்நடை உரிமையாளர்களுக்கு ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு கால்நடைகளை பிரதான சாலைகள் மற்றும் தெருக்களில் விடாமல் கட்டி வைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

“இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில், 27.08.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் தன்னுடைய 19.08.2024 நாளிட்ட கடிதத்தில், தனக்கு சென்னை உயர்நீதிமன்றப் பணி இருப்பதாகவும் அதனால் விசாராணையில் கலந்து கொள்ள இயலாது என்றும், தன் மனு மீது தகுதியின் அடிப்படையில் ஆணைப்பிறப்பிக்குமாறு தெரிவித்துள்ளார்.

5) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் கால்நடை உதவி மருத்துவர் மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோர் நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்தனர்.

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ல் கடந்த வருடம் சாலைகளில் சுற்றி திரிந்த 300 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.15,15,000/– அபராதம் வசூலிக்கப்பட்டது. மேலும் பகுதி 37யை உள்ளடக்கிய நங்கநல்லூர் மற்றும் பழவந்தாங்கல் பகுதிகளில் 112 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ.5,60,000/– அபராதம் விதிக்கப்பட்டது. 09.10.2023 அன்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பிரதான சாலைகள் மற்றும் தெருக்களில் மாடுகளை விடாமல் கட்டி வைத்து வளர்க்குமாறு கால்நடை உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. சென்னை நங்கநல்லூர் எம்.ஜி.ஆர் ரோட்டில் மாடுமுட்டி முதியவர் இறந்தது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச்செயலாளர்/ ஆணையரின் உத்தரவினை தொடர்ந்து அப்பகுதியில் சுற்றி திரிந்த 9 மாடுகள் பிடிக்கப்பட்டு அவைகள் மாட்டுத் தொழுவத்தில் ஒப்படைக்கப்பட்டு, பழவந்தாங்கல் காவல் நிலையத்திலும் புகார் அளிக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. இதுநாள் வரை மாட்டின் உரிமையாளர் யார் என்பது அறிய இயலவில்லை. இப்பகுதியில் சுற்றித் திரியும் மாடுகளை பிடிக்கும் பணி தொடர்ந்து தீவிர கண்காணிப்பில் உள்ளது என்று இம்முறைமன்றத்தில் பதிவு செய்கிறேன். மண்டலம் 12ல் சாலைகளில் சுற்றித்திரியும் கால்நடைகள் சம்மந்தமாக வரும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு கடந்த ஜூலை (01.07.2024) முதல் மாடுகளை பிடிப்பதற்கென மண்டல

அளவில் 5 பணியாளர்கள் தலைமையகம் மூலம் நியமிக்கப்பட்டு மாடுகள் பிடிக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் ரூ 5000/– ஆக இருந்த அபராதத் தொகை 01.08.2024 முதல் ரூ.10,000/– ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அபராதத் தொகை உயர்வின் காரணமாக தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருகிறது. மேலும் பிடிக்கப்படும் மாடுகளை பராமரிக்க பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒவ்வொரு மண்டலத்திலும் தனியாக ஒரு இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம் 12ல் சுற்றித்திரியும் மாடுகள் மாநகராட்சி ஊழியர்களால் பிடிக்கப்படும் புகைப்படங்களை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றோம்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல நல அலுவலரின் 18.03.2024 மற்றும் 22.08.2024 நாளிட்ட கடிதங்களில் கண்டுள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்லம் 12ல் மாடுகள் சாலைகளில் சுற்றி திரிவதாகவும், அதனை கட்டுப்படுத்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் அலுவலர்கள் தங்கள் கடமையிலிருந்து தவறிவிடுகின்றனர் அதனால் சென்னை நங்கநல்லூரை சேர்ந்த ஒரு முதியவர் மாடு முட்டி இறந்துவிட்டதாக செய்திதாள்களில் வந்துள்ளது என்றும், இதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் அலுவலர்களின் கடமை தவறிய மற்றும் கண்காணிக்க தவறிய காரணத்தினால் ஏற்பட்டது என்றும் எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், பொதுமக்கள் சாலைகளில் அச்சமின்றி நடமாட நிரந்தர நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ல் கடந்த வருடம் 303 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 15,15,000/-மும், பகுதி 37ல் 112 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 5,60,000/- வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், ஜனவரி முதல் ஜுலை 2024 வரை 84 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 4,20,000/- வசூலிக்கப்பட்டுள்ளது என்றும் 01.07.2024 முதல் சாலையில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்கும் பணிக்கு 5 பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், 1.8.2024 முதல் அபராதத் தொகை ரூ 5,000/-லிருந்து ரூ 10,000/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அபராதம் உயர்த்திய ஆகஸ்ட் 2024 முதல் தற்போது வரை 9 மாடுகள் பிடிக்கப்பட்டு ரூ 90,000/- வசூலிக்கப்பட்டுள்ளது என்றும், அவ்வப்போது மண்டலம் 12ல் உள்ள கால்நடை உரிமையாளர்களுக்கு ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு மாடுகளை தெருக்களில் விடாமல் கட்டி வைத்து வளர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்12ன் மண்டல அலுவலர் தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சியில் சாலையில் சுற்றித்திரியும் மாடுகளால் பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு இடையூறு ஏற்படுவதோடு பொதுமக்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதை தடுக்கும் வண்ணம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 12ன் அலுவலர்கள் Section 106 of Tamil Nadu Urban Local Bodies Act 1998 மற்றும் Rule 292 of Tamil Nadu Urban Local Bodies Rules 2023ன்படி, சாலைகளில் சுற்றித்திரியும் மாடுகளை பிடிக்க நடவடிக்கை எடுக்குமாறு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

சாலைகளில் சுற்றிதிரியும் மாடுகளால் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதை கருத்திற்கொண்டு இந்நேர்வில் தனிக்கவனம் செலுத்தவும், சாலையில் சுற்றித்திரியும் மாடுகளின் உரிமையாளர்களிடம் பாரபட்சமற்ற முறையில் உரிய அபராதம் வசூலிக்குமாறும் மாடுகளை சாலையில் விடாமலிக்க உரிமையாளர்களுக்கு அறிவுறுத்துமாறும் பெருநகர சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு பெருநகர சென்னை

மாநகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் மாடுகளை பிடித்து அடைக்க ஒவ்வொரு மண்டலத்திலும், இடம் தேர்வு செய்யும் நடவடிக்கையினை விரைந்து செயல்படுத்தவும், அது குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B.இரமேஷ்,
வழக்கறிஞர், 222, புதிய கூடுதல் சட்ட அறை,
உயர்நீதி மன்ற வளாகம், சென்னை–104.

2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் 12,
பெருநகர மாநகராட்சி,
G S T ரோடு அருகில் ஆலந்தூர், சென்னை–600 016.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ./உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

20/9/24